1981 எப்ரல் 28]

திரு. சேலம் மு. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மென்மையான மரங்கள் சேலம் மாவட்டத்தில் மலைப் பகுதிகளில் அதிகமாக விளைகின்றன. அதனால் அங்கே தீக்குச்சி தொழிற்சாலை அமைக்க அரசிடம் உத்தேசம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நடப்பாண்டில் இல்லை. எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும்.

பந்தலூரில் ஒட்டுப்பலகை கூட்டுறவுத் தொழிற்சாலை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 911—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் கடலூர் வட்டம், பந்தலூரில் ஒட்டுப்பலகை கூட்டுறவுத் தொழிற்சாலை எப்போது அமைக்கப்பட உள்ளது?

(ஆ) அதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு ஒட்டுப்பலகை மற்றும் வினியர்ஸ் தொழில் கூட்டுறவு தொழிற்சாலை லிமிடெட் பந்தலூரில் 31—3—1980-ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் மதிப்பீடு ரூபாய் 20.22 லட்சம். இத் தொழிற்சாலையை அமைப்பதற்குத் தகுதியான இடத்தை தேர்ந்தெடுக்க தொழில் நுட்ப நிபுணர்களின் கருத்தைப்பெற்று இத் திட்டத்தை நிறைவேற்ற மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்பொழுது தொழிற்சாலை அமைப்பதாகக் கூறினார்கள். அந்தப் பகுதியில் ஸ்ரீலங்காவிலிருந்து வந்திருக்கிற ரிபாட்டிரியேட்ஸ் அதிகமாக இருக்கிறார்கள். அங்கே தொழிற்சாலை அமைக்கும்பொழுது ஸ்ரீலங்கா ரிபாட்டிரியேட்ஸ்சுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுபற்றிய குறிப்பு இப்போது என்னிடத்தில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் பரிசீலிக்கப்படும்.

திரு. கே. உச்சி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழிற்சாலைக்கான இடம் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். பெங்களூரிலிருந்து 'ஸ்பெஷலிஸ்ட்ஸ்' வந்து பார்வையிட்டு அதனுடைய முறையை அரசிற்கு அறிவித்திருப்பதாகத் தெரிகிறது. அது உண்மையா ? தொழிற்சாலை எப்போது துவங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எந்த இடத்திலே தொழிற்சாலை அமைப்பது என்ற பரிந்துரையை பெங்களூரிலிருக்கிற 'இந்தியன் இன்டஸ்ட்ரியல் பிளைவுட் இன்ஸ்டிடியூட்' என்ற நிலைய நிபுணர்களிடம் அபிப்பிராயம் கேட்கப்பட்டிருக்கிறது. அந்த அபிப்பிராயம் வந்தவுடன் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதியில்தான் அது எந்த இடத்தில் என்று நிர்ணயிக்கப்படும்.

ஆற்காடு—கண்ணமங்கலம் சாலையினைப் புதுப்பிக்கும் திட்டம்.

* வினா எண் 912—திரு. இல. பலராமன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடஆற்காடு மாவட்டம் ஆற்காடு—கண்ணமங்கலம் சாலையைப் புதிப்பிக்க அரசிடம் தனித்திட்டம் ஏதேனும் உண்டா ?

(ஆ) ஆம் எனில் எப்போது நிறைவேற்ற எடுத்துக்கொள்ளப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) ஆற்காடு கண்ணமங்கலம் சாலையைப் புதுப்பிக்கும் பணியில் ஓரளவு முடிவுற்றும், மீதிப் பணிகளுக்கு மதிப்பீடுகள் அங்கீகரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் அழைக்கப்பட்டும் உள்ளன. ஒப்பந்தங்கள் முடிக்கப்பட்டவுடன் பணிகள் மேற்கொள்ளப்பட்டு விரைவில் முடிக்கப்பட்டுவிடும்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இன்றைய தினம் வரையில் ஓரளவுக்கு வேலை செய்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள் . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விரைவில் கட்டி முடிக்கப்பட்டு விடும் என்று சொல்லிவிட்டார்.